இங்கு வருகிறதா? இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள் தமிழக அரசினிடத்திலே உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி, விழுப்புரம், திண்டிவனம் பகுதியில் எத்தனை கலப்புரம் தயாரிக்கின்ற தொழிற்சாலை இருக்கிறது, அதன்மீது ஏதாவது புகார் இருக்கிறதா என்பதுதான். ஆகவே, நான் தந்த விளக்கத்தைத் தவிர வேறு ஒன்றும் இப்பொழுது என்னிடத்திலே தகவல் இல்லை.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி

*3407. திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ)மற்றும்(ஆ) இல்லை.

திரு. கோ. வீரையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நீண்டகாலமாகப் பேசப்பட்டு, தஞ்சைக்கு அருகில் இருக்கக்கூடிய வேளாண்மைத் துறையினுடைய ஒரு ஆராய்ச்சிப் பண்ணையாக இருக்கக்கூடிய காட்டுத் தோட்டத்தை மையமாக வைத்து ஒரு வேளாண்மைக் கல்லூரி துவக்கப்படும் என்று இந்த அவையிலேகூட வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, அப்படிப் பரிசீலனையிலேயே இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கக் கூடிய, கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய வாக்குறுதியின் அடிப்படையிலே, அதை மீண்டும் பரிசீலனை செய்து, அப்படியொரு கல்லூரி அங்கே கிடைக்கச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அவையில் நான் ஒன்றும் அப்படிப்பட்ட வாக்குறுதியைத் தரவில்லை, வேளாண்மைக் கல்லூரி தற்போது, கோயம்புத்தூர், மதுரை, கிள்ளிகுளம்—சிதம்பரனார் மாவட்டத்திலே இருக்கிறது. சென்ற ஆண்டு திருச்சி மாவட்டத்தில் குமுளூரில் அன்பில்தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி ஒன்று அனுமதிக்கப்பட்டு, அதற்கான கட்டடப் பணிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. இதைத் தவிர தஞ்சாவூரில் வேறு ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கான செயல்குறிப்பு அரசிடம் இல்லை. இல்லையென்று சொல்வது, தற்போது இல்லை, அவ்வளவு தான்.

9-45 மணி.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது சொன்னார்கள். இந்த அவையில் நான் ஒன்றும் வாக்குறுதி அளிக்கவில்லை என்றார். நானும் அப்படி சொல்லவில்லை. அந்த அமைச்சர் வேளாண்மைத் துறைக்கு பொறுப்பேற்ற பிறகு சொன்னார்கள் என்று நான் சொல்லவில்லை. இந்த அவையிலே வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கிறது. அது எந்த அமைச்சராக இருந்தாலும், யார் பொறுப்பில் இருக்கிறார்களோ, இந்த அவை நிரந்தர மானது. அமைச்சர்கள் துறைகளில் மாறலாம். காட்டுத் தோட்டத்தை அடிப்படையாக கொண்டு அங்கே வேளாண்மை கல்லூரி அமைக்கப்படும் என்று ஒரு வாக்குறுதி வழங்கப்பட்டிருக் கிறது. இந்த அவையில் கொடுக்கப்பட்டிருக்கிற வாக்குறுதியை பரிசீலனை செய்து, திருச்சியில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்பட்டிருந்தாலும், அதிலே ஒரு பிரிவு மாணவர்களைக் கொண்டு வந்தாவது, பயிற்சி கொடுக்கக் கூடிய ஒரு முயற்சியை அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு எந்த வாக்குறுதியையும் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். இருப்பினும் ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு 5 ஆண்டுகளுக்காகும் மொத்தச் செலவு 27 கோடி ரூபாய் ஆகும். தொடர் செலவு 5 கோடி ரூபாய் ஆகும்: தொடரா செலவு 22 கோடி ரூபாய் ஆகும். ஒரு வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால் 1,000 ஏக்கர் நிலம் தேவை, இப்போது இருக்கிற வேளாண்மை கல்லூரிகளில் படித்து, வேலை இல்லாமல் இருக்கிற பட்டதாரிகள் 1,300 பேர்கள் இருக்கிறார் கள். இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டுதான் தற்போது உத்தேசம் இல்லையென்று சொன்னேன். எதிர்காலத்தில் தேவை ஏற்படின், தஞ்சாவூரிலும் வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கு பரிசீலிக்கலாம்.